**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2019 சனவரி

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

---

*பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பல பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் குறிப்பிட்ட குறைபாடுகள் இருந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. விடைகளை மதிப்பீடு செய்த பரீட்சகர்களின் அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன :*

## <u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – 40 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

இவ்வினா ஒட்டுமொத்த பாடத்திட்டத்தையும் பரந்தளவில் உள்ளடக்கி மொத்தமாக 40% புள்ளிகளுக்காகக் கட்டமைக்கப்பட்டிருந்தது. இது பாடத்திட்டத்தில் அமைக்கப்பட்ட கனத்திற்கேற்ப அடிப்படை விஞ்ஞானரீதியான பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. வினா இலக்கங்கள் **1.1** தொடக்கம் **1.10** வரை தரப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யும்படி கேட்கப்பட்டிருந்தது. வினா இலக்கங்கள் **1.11** தொடக்கம் **1.15** வரை கோட்பாடுகள் / எண்ணக்கருக்கள் பற்றித் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்ட அதே வேளை வினா இலக்கங்கள் **1.16** தொடக்கம் **1.20** வரை தரப்பட்ட இரு தெரிவுகளிலிருந்து பொருத்தமானதைக் கொண்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது. இந்த வினாக்கள் இலகுவான வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

பல பரீட்சார்த்திகள் இவ்வினாக்களுக்கு திருப்திகரமாக விடையளித்திருந்ததுடன் மேல் மட்டத்தில் புள்ளிகளைப் பெற்றிருந்தனர் என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், இந்தப் பகுதியில் உள்ள சில வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் அளித்த விடைகளில் குறைபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் பொதுவாக அவதானிக்கப்பட்ட ஒரு சில பிழைகள் / பலவீனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன:

**1.1** சகல பரீட்சார்த்திகளும் சரியான விடையான இலக்கம் (4) இலுள்ள விடையினைத் தெரிவு செய்திருந்ததுடன் இப்பகுதிக்குரிய மொத்தப் புள்ளியான 2 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**1.2** பல பரீட்சார்த்திகள் ‘‘பிரதியீட்டுப் பொருட்கள்’’ என்பதைச் சரியான விடையாகத் தெரிவு செய்திருந்தனர்.

**1.3** பல பரீட்சார்த்திகள் பரிந்துரைக்கப்பட்ட சகல 4 விடைகளும் சரியானது எனத் தெரிவித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் விடை இல. (2) இனைச் சரியான விடையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.4** ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடை காணப்பட்ட விடை இல. (4) இனைக் குறிப்பிட்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் பிழையான விடைகளையே குறிப்பிட்டிருந்தனர்.

**1.5** விடை இல. (4) இல் தரப்பட்டிருந்த விடையே சரியான விடையாகும். பலர் அதனைத் தெரிவு செய்யவில்லை என்பதுடன் எவ்வித புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவும் இல்லை.

**1.6** அரசாங்கத்தின் பெரும்பாகப் பொருளியல் நோக்கங்களுக்கான சரியான விடையாக விடை இல. (3) இல் தரப்பட்ட விடையினை குறிப்பிடுவதற்கு பல பரீட்சார்த்திகளால் முடியாமற் போயிருந்தது. அவர்கள் அது பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

**1.7** சந்தைப் பொருளாதாரத்தின் சரியான பண்பியல்பாக 4 ஆவது தெரிவில் தரப்பட்ட விடையை சரியாகத் தெரிவு செய்திருந்த பலர் காணப்பட்டனர். எனவே, பெரும்பாலானவர்களால் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**1.8** பல பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்த புள்ளியில் சராசரி மொத்தக் கிரயமானது எல்லைக் கிரயத்திற்குச் சமனாக இருக்கிறது என இனங்கண்டிருந்தனர்.

**1.9** இலங்கை மத்திய வங்கியின் ஆண்டிறிக்கையின்படி, 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தலா வருமானத்தைச் சரியாகக் குறிப்பிடுவதற்கு பரீட்சார்த்திகளால் முடியாமற் போயிருந்தது. இது, அவர்கள் மத்திய வங்கி அறிக்கை போன்ற வருடாந்த அறிக்கைகளை பயன்படுத்தியிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

**1.10** பல பரீட்சார்த்திகள் ஏற்றுமதிகளின் பெறுமதி இறக்குமதிகளின் பெறுமதியை விட அதிகமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்த தெரிவு 1 இனைச் சரியாகத் தெரிவு செய்திருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான சரியான விடைகள், தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, தவறா எனக் குறிப்பிடுவதன் மூலம் வழங்கப்பட வேண்டும். இந்த 5 வினாக்களுக்குமான விடைகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. வினா இல. **1.11** இற்கு அதிகமாகப் பிழையான விடையே வழங்கப்பட்டிருந்தது. சமபயன் வளையி பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. அது பற்றிய விளக்கமின்மை காரணமாக தவறான விடைகளே அளிக்கப்பட்டிருந்தன.

வினா இலக்கம் **1.16** தொடக்கம் **1.20** வரை தரப்பட்ட 2 விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்திருத்தல் வேண்டும். பல பரீட்சார்த்திகள் வினா இல. **1.20** இற்கு தவறான விடையையே அளித்திருந்தனர்.

நிதிசார் இடைநிலை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு போதுமானதாக இல்லாமை அவர்கள் வழங்கிய தவறான விடைகளிலிருந்து தெரிய வருகிறது. பலர் புள்ளிகளைப் பெற்றிராத ஒரு வினாவாக இது காணப்பட்டது.

## <u>பகுதி B</u>

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்கள்.

**வினா இல. 02** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

**(a)** நுகர்வோர் நடத்தையை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக சமநிலை விலை மற்றும் கணியத்தின் கணிப்பீட்டின் மூலம் பல பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகளால் தரப்பட்ட வினாக்களைச் சரியாக சுருக்குவதற்கு இயலாமற் போயிருந்தது.

பல பரீட்சார்த்திகள் இவ்வினாவின் **பகுதி (iii)** இற்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். நுகர்வோரின் சுவை மாறுபடுவதுடன் தொடர்புடைய பகுதியினை அவர்கள் சரியாக விளங்கிக்கொண்டிருக்கவில்லை. எனவே, பல பரீட்சார்த்திகள் இதனை கேள்வியின் அதிகரிப்பு அல்லது குறைவு என்றவாறு விளங்கியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே கேள்வியின் குறைவு மற்றும் சமநிலை விலையின் குறைவு ஆகியவை பற்றி சரியாக விடையளித்திருந்தனர்.

**(b)** கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் துணியும் காரணிகள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்கு இவ்வினா அமைக்கப்பட்டிருந்த போதிலும் பரீட்சார்த்திகளால் எழுதப்பட்டிருந்த விடைகள் வினாவின் எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**வினா இல. 03** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

**(a)** இவ்வினா பொருளியலின் உற்பத்தி மற்றும் கிரயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வரைபு ஒன்றின் உதவியுடன் மூடுகைப் புள்ளி மற்றும் சமநிலைப் புள்ளி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சரியானவாறு விளக்குவதற்குத் தவறியிருந்தனர் என்பது அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து நிரூபணமாகியுள்ளது. பரீட்சார்த்திகள் மூடுகைப் புள்ளி பற்றிய எவ்வித விளக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிடக்கூடிய அதே நேரம், நிறுவனத்தின் சமநிலைப் புள்ளியில் மொத்த வருமானம் மொத்தக் கிரயத்திற்குச் சமமாக இருக்க வேண்டும் என்பது அவசியமானது என்பது பற்றிய விழிப்புணர்வு அவர்களிடம் காணப்படவில்லை என்பதையும் அவர்கள் வரைபினைச் சரியாக வரையத் தவறியிருந்ததுடன் சரியாக விளக்கவும் தவறியிருந்தனர் என்பதையும் குறிப்பிட முடியும்.

**(b)** **(i)** வர்த்தக வங்கியொன்றின் 3 தொழிற்பாடுகளை நிரற்படுத்திய பல பரீட்சார்த்திகள் காணப்பட்டதுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும், சில பரீட்சார்த்திகள் பண வழங்கல், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்களின் விற்பனை மற்றும் பொருளாதாரத்திற்கு நன்மைபயக்கும் சேவைகளை ஆற்றுதல் போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(ii)** அதிகளவான பரீட்சார்த்திகள் இலங்கையில் உள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளாக தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை எழுதியிருந்தனர். வர்த்தக வங்கிகள் பற்றிய எவ்வித சரியான விளக்கமும் அவர்களிடம் காணப்படவில்லை என்பது ஒவ்வொரு விடைத்தாளைப் பரீட்சிக்கும்போதும் தெளிவாகத் தெரிந்தன.

**வினா இல. 04** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

**(a)** இவ்வினா பணம் மற்றும் விலை மட்ட எண்ணக்கருவின் கீழ் பணத்திற்கான கேள்வி பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க அமைக்கப்பட்டிருந்தது. இது சரியான விடைகள் அளிக்கப்பட்டிராத ஒரு வினாவாக அமைந்திருந்தது. பரீட்சார்த்திகள் வரைபினைச் சரியாக வரைவதற்கான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

சமநிலை வட்டி வீதம் பற்றிய எவ்வித கற்றலிலும் பரீட்சார்த்திகள் ஈடுபட்டிருக்கவில்லை என்பது அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. சில பரீட்சார்த்திகள் கேள்வி வளையிகளுக்குப் பதிலாக நிரம்பல் வளையிகளை வரைந்திருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகள் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இது மிகவும் குறைவாக விடையளிக்கப்பட்ட ஒரு வினாவாகும்.

**(b)** இவ்வினா பணவீக்கம் மற்றும் விலை மட்ட எண்ணக்கருவின் கீழான பரீட்சார்த்திகளின் நடைமுறை அறிவைப் பரீட்சிப்பதற்கு அமைக்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் கேள்வி இழுப்பு பணவீக்கம் பற்றிச் சரியாக விளக்கியிருந்தனர். கிரய இழுப்பு பணவீக்கத்திற்கு சரியாக விடையளிப்பதற்கான ஆற்றலின்மை காரணமாக அவர்கள் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**வினா இல. 05** – 10 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

**(a)** இவ்வினா நிதிக் கொள்கை மற்றும் அதன் கருவிகளின் எண்ணக்கரு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது.

பண நிரம்பல் முகாமைத்துவத்திலுள்ள போதுமானளவு கட்டுப்பாடுகள், எவ்வாறு திறந்த சந்தை வர்த்தகத் தொழிற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன என்பது பற்றி அதிகளவான பரீட்சார்த்திகளால் முன்வைக்கப்பட்ட விடைகளில் சரியான விளக்கங்கள் காணப்படவில்லை. இதற்கான காரணமாக வினாவை விளங்கிக்கொள்ளத் தவறியமையே காணப்படுகிறது. வேறு சந்தைகள் ''திறந்த சந்தைகளுக்காக'' எழுதப்பட்டிருந்த விடைகளும் காணப்பட்டன. அது ஒரு மத்திய வங்கிச் செயற்பாடாக இருந்தது என்பது பற்றிய எவ்வித யோசனைகளும் அவர்களிடம் காணப்பட்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகளிடம் திறைசேரி உண்டியல்களின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் பற்றிய சரியான விளக்கம் காணப்பட்டிருக்கவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடைகளை எழுதியிருந்தனர்.

**(b)** சர்வதேச வர்த்தக எண்ணக்கருவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இவ்வினா பாதுகாப்புவாதத்தின் 2 பிரதிகூலங்களை வினவியிருந்தது. பல பரீட்சார்த்திகள் சரியான விடையினை எழுதி 2 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்துடன் தொடர்புடையதான இவ்வினாவுக்கு சரியாக விடையளித்து 4 புள்ளிகளை பெற்றுக்கொண்ட பல பரீட்சார்த்திகள் காணப்பட்டனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் மதிப்பிறக்கம் என்பதைப் பிழையாக விளங்கிக்கொண்டிருந்ததுடன் ரூபாவின் பெறுமதியின் அதிகரிப்பு பற்றி எழுதியிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** – 20 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

**(A)** **(a)** சந்தைப் பொருளாதார முறைமையின் கீழ்க் குறிப்பிடப்படும் வகிபாக எண்ணக்கரு பற்றிய பரீட்சார்த்திகளின் நடைமுறை அறிவைப் பரீட்சிப்பதற்கு இவ்வினா கட்டமைக்கப் பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் அரச (பொது) முயற்சி நிறுவனங்களின் பிரதிகூலங்களைக் குறிப்பிட்டு இலகுவாக 2 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** அரசாங்கப் பாதீட்டின் 4 பிரதான நோக்கங்களை குறிப்பிடுவதற்கு இவ்வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. வருமானம் மற்றும் செலவினம், (அரச) பொதுத் துறைச் சம்பளங்களுடன் தொடர்புடைய முக்கியமற்ற விடயங்கள் பற்றி எழுதப்பட்டிருந்தன.

**(B)** தேசிய கணக்குகள் தொடர்பான நடைமுறை விளக்கத்தைச் சோதிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இவ்வினாவுக்கு குறைந்தளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(a)** அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர் வரியைக் கணிப்பிடுவதற்கான பல பரீட்சார்த்திகளின் முயற்சி வெற்றியளித்திருக்கவில்லை. இதற்கான பிரதான காரணம், எவ்வாறு மொத்த பெறுமதி சேர் வரியினைச் சரியாகக் கணிப்பிடுவது என்பது பற்றிய விழிப்புணர்வு காணப்படாமையே ஆகும். அவர்கள் ஊழியர்களுக்கான நட்டஈட்டினை சேர்த்திருந்ததுடன் நிகர நேரில் வரிகளையும்கூட சேர்த்திருந்த அதே வேளை சில பரீட்சார்த்திகள் நிகர வெளிநாட்டு நடைமுறை மாற்றல்களைச் சேர்த்திருந்ததுடன் பிழையான விடைகளைச் சமர்ப்பித்திருந்தனர். எனவே அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை.

**(b)** மேலே (a) இல் விடையளித்தல் வெற்றிகரமாக அமையாதிருத்தல் மற்றும் நிகர நேரில் வரிகளைச் சேர்ப்பதற்குப் பதிலாக, உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரிகளைச் சேர்த்தல் ஆகியவற்றின் விளைவாக சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பெறுகையில், அது முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கான சாத்தியத்தைக் கொண்டிருக்கவில்லை.

**(c)** மொத்தத் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுகையில், சில பரீட்சார்த்திகள் நிகர வெளிநாட்டு முதன்மை வருமானமான ரூ. 1,200 மில்லியனைச் சரியாகச் சேர்த்து 1 புள்ளியைப் பெற்றிருந்த போதிலும், முன்னைய கணிப்பீடுகள் பிழையாக இருந்ததன் காரணமாக அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**(d)** மொத்த தேசிய விற்பனை வருமானத்தைப் பெறும் பொருட்டு, பரீட்சார்த்திகள் நிகர வெளிநாட்டு நடைமுறை மாற்றல்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக நிகர நேரில் வரிகளைச் சேர்த்திருந்ததால் அவர்கள் இலகுவாகப் பெற்றிருக்கக்கூடிய 10 புள்ளிகளையும் பெறுவதற்குத் தவறியிருந்தனர்.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் செயன்முறையின்போது, இந்தக் கணிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய சமன்பாடுகள் பற்றிய எவ்வித விளக்கத்தையும் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதை அறியக்கூடியதாக இருந்தது. தேசிய கணக்கீடு பற்றிய பூரணமான விளக்கமோ, அறிவோ பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பது அவர்கள் அளித்த விடைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

**(C)** **(a)** பொருளாதார வளர்ச்சி பற்றிய சில பரீட்சார்த்திகளால் எழுதப்பட்ட விடைகள் மிகவும் திருப்தியற்ற வகையில் காணப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி பற்றிய விடயங்கள் எழுதப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**(b)** சில பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகள் போதுமானதாக இருக்காத போதிலும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் மிகவும் திருப்திகரமான விடைகளை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்கள் பொருளாதார அபிவிருத்தியின் கீழ் எழுதப்பட்டிருந்தன.

\- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. விசேடமாகச் சுய கற்றல் புத்தகங்கள், புத்தகங்கள், கையேடுகள், ஆவணங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.

5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.

6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காணப்தற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.

7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர்புடை யவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.

12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -